செ. கு. எண்: 308 நாள் : 26.11.2013

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 26.11.2013

3.11.2013 அன்று கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், பெராம்பட்டு கிராமம் அருகே உள்ள காட்டுப் பகுதிக்கு செல்லும் போது அறுந்த கிடந்த மின்சார கம்பியை மிதித்ததால் கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், வேளக்குடி கிராமத்தைச் சேர்ந்த திரு. ஹரிதாஸ் மற்றும் திரு. சுப்ரமணியன்;

16.11.2013 அன்று சாலையில் நடந்து சென்று கொண்டிருந்த போது அறுந்து கிடந்த மின்சார கம்பியை மிதித்ததால் நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுரை வட்டம், கோடங்குடி கிராமத்தைச் சேர்ந்த திரு. ஹரிகிருஷ்ணன் என்பவரின் மகன் கணேஷ்;

16.11.2013 அன்று வீட்டின் அருகே அறுந்த கிடந்த மின்சார கம்பியை மிதித்ததால் தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், அணைக்குடி கிராமத்தைச் சேர்ந்த திரு. ராஜேந்திரன் மற்றும் அவரது மகன் திரு. ரவிவர்மன்

17.11.2013 அன்று வீட்டின் அருகே அறுந்த கிடந்த மின்சார கம்பியை மிதித்ததில் நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், அரிவளூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. பக்கிரிசாமி என்பவரின் மனைவி கமலா ஆகியோர்;

–– மின்சாரம் தாக்கி உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

மின்சாரம் தாக்கி உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9